# அற்புதக் குழந்தை இயேசு நவநாள் செபம்



சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத் தமிழ் ஆணையம்

# அற்புதக் குழந்தை இயேசு நவநாள் செபம்

## தொடக்கப் பாடல்:

முத : அற்புதக் குழந்தை இயேசுவே!

எல் : அடியோர் மேல் இரக்கமாயிரும். *(மூன்று முறை)*

முத : திருச்சிலுவை அடையாளத்தினாலே எங்கள் பகைவர்களிடமிருந்து எங்களை மீட்டருளும் எங்கள் இறைவா. தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...

எல் : ஆமென்.

## தொடக்கச் செபம்:

எல் : அற்புதக் குழந்தை இயேசுவே! எங்களை ஆசீர்வதித்து வரவேற்கக் கரம் விரித்துக் காத்திருக்கின்றீர். செபத்தின் வழியாக உம்மை வாழ்த்தி வணங்க எங்களுக்கு உதவி புரியும். நீரே எங்கள் ஆண்டவர். நீரே எங்கள் மீட்பர். எங்களைப் பற்றி உமக்கு அதிக அக்கறை உண்டு. எங்கள் மன்றாட்டுக்களைக் கேட்க நீர் எங்களோடு எப்போதும் இருக்கின்றீர். எனவே, எங்கள் குரலுக்குச் செவிசாய்த்து, எங்கள் மன்றாட்டுக்களைக் கருணை கூர்ந்து அளித்தருளும். வல்லமை மிக்க உமது உதவியைத் தாழ்ந்த உள்ளத்தோடு கெஞ்சிக் கேட்கிறோம். தந்தையோடும், தூய ஆவியாரோடும், இறைவனாக என்றென்றும் வாழ்ந்து ஆட்சி புரியும் எங்கள் ஆண்டவராகிய இயேசுவே. ஆமென்.

## குழந்தை இயேசு செபமாலை:

*(திருக்குடும்பத்தின் மாட்சிக்காக இயேசு கற்பித்த செபத்தை மூன்று முறை சொல்லவும்)*

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

எல் : எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

*(நம் மீட்பருடைய குழந்தைப் பருவத்தின் பன்னிரு ஆண்டுகளின் நினைவாக மங்கள வார்த்தை செபத்தை பன்னிரு முறை சொல்லவும்)*

முத : தந்தையாம் இறைவன், கபிரியேல் என்னும் வானதூதரைக் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த மரியா என்ற ஒரு கன்னியிடம் அனுப்பி, 'நீர் தூய ஆவியார் வழியாக கருவுற்று, உன்னதக் கடவுளின் இறை மகனுக்குத் தாயாவீர்' என்று வாழ்த்துரைத்ததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : வானதூதர் மரியாவிடம் 'உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம்' என்று சொன்னதும், யூதேய மலைநாட்டிலுள்ள செக்கரியாவின் வீட்டுக்கு விரைந்து சென்று, எலிசபெத்தை வாழ்த்தியதைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : இறைவனால் முன்னுரைத்தபடியே, நம் அனைவரையும் மீட்பதற்காக இறை மகன் இயேசு பெத்லகேம் என்னும் ஊரில் ஒரு மாட்டுத்தொழுவில் பிறந்ததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : பெத்லகேமின் வயல்வெளியில் இரவெல்லாம் தங்கள் கிடையைக் காவல் காத்துக் கொண்டிருந்த இடையர்களிடம் வானதூதர் தோன்றி, 'இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்' என்று அறிவித்ததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : இயேசு பிறந்து எட்டாம் நாள் வந்த போது, தாயின் வயிற்றில் உருவாகு முன்பே வானதூதர் சொல்லியிருந்தவாறு குழந்தைக்கு இயேசு என்று பெயரிட்டு, விருத்தசேதனம் செய்யததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : பெத்லகேமில் இயேசு பிறந்த போது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து, நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து, குழந்தையை வணங்கி, தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப்போளமும் காணிக்கையாகக் கொடுத்ததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : திருச்சட்ட வழக்கத்திற்கு ஏற்பச் செய்ய வேண்டியதைச் செய்து முடிக்கக் குழந்தை இயேசுவை பெற்றோர் கோவிலுக்குக் கொண்டு வந்த போது, சிமியோன் இயேசுவைக் கையில் ஏந்திக் கடவுளைப் போற்றி, கோவிலில் அர்ப்பணித்ததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் திரும்பிச் சென்றபின், வானதூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, 'நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும். ஏனெனில், குழந்தையைக் கொல்ல ஏரோது தேடப் போகிறான்' என்று எச்சரித்து, அவர்கள் எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : வானதூதரின் எச்சரிப்பைத் தொடர்ந்து யோசேப்பு, மரியா, குழந்தை இயேசு மூவரும் எகிப்து நாட்டுக்குச் சென்று, ஏரோது இறக்கும் வரை அங்கேயே இருந்து, திருக்குடும்பமாக வாழ்ந்தததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : ஏரோது காலமானதும், ஆண்டவருடைய தூதர் எகிப்தில் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, 'நீர் குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரயேல் நாட்டுக்குச் செல்லும்'

என்ற பின், அவர்கள் இஸ்ரயேல் நாட்டுக்கு வந்து நாசரேத்து எனப்படும் ஊரில் தங்கி வாழ்ந்ததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்து முடித்த பின்பு அவர்கள் கலிலேயாவிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிச் சென்று வாழ்ந்தார்கள். குழந்தை இயேசுவும் வளர்ந்து, வலிமை பெற்று, ஞானத்தால் நிறைந்து, கடவுளுக்கு உகந்தவராக வாழ்ந்ததைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

முத : இயேசுவுக்குப் பன்னிரண்டு வயது ஆன போது, ஆண்டு தோறும் இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்குச் சென்றபோது, எருசலேமில் தங்கிவிட்ட இயேசுவை மூன்று நாள்களுக்குப் பின் கோவிலில் கண்டதைப் பற்றித் தியானிப்போம்.

எல் : 'வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'

முத : அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

எல் : தூய மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும்.ஆமென்.

*(மூவொரு இறைவனின் மாட்சிக்காக மூவொரு இறைவன் புகழை மூன்று முறை சொல்லவும்)*

முத : தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.

எல் : தொடக்கத்திலே இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

## இறுதி செபம்:

எல் : அற்புதக் குழந்தை இயேசுவே! உமது ஒப்பற்ற வல்லமையை வியத்தகு முறையில் வெளிப்படுத்தி, உமது திருக்கரத்தின் ஆசீரால் எங்களை எல்லா நன்மைகளாலும் நிரப்புகின்றீர். நம்பிக்கையோடு உம்மைக் கூவி அழைக்கும் எங்கள் அனைவரின் மன்றாட்டுக்களுக்குக் கனிவாய் செவிசாய்த்தருளும். ஆமென்.

முத : அற்புதக் குழந்தை இயேசுவே!

எல் : எங்களை ஆசீர்வதித்துப் பாதுகாத்தருளும். *(மூன்று முறை)*

## குழந்தை இயேசு புகழ் மாலை:

முத : ஆண்டவரே இரக்கமாயிரும்...

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

முத : கிறிஸ்துவே இரக்கமாயிரும்...

எல் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

முத : ஆண்டவரே இரக்கமாயிரும்...

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

முத : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

எல் : கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கனிவாகக் கேட்டருளும்.

முத : விண்ணகத் தந்தையாகிய இறைவா...

எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

முத : உலகை மீட்ட திருமகனாகிய இறைவா...

எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

முத : தூய ஆவியாகிய இறைவா...

எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

முத : மூவொரு கடவுளாகிய இறைவா...

எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

*(கீழுள்ள புகழுக்குப் பதிலுரையாக* ***எங்கள் மேல் இரக்கமாயிரும்*** *என்று சொல்லவும்)*

முத : அற்புதக் குழந்தையாகிய இயேசுவே...

முத : வியத்தகு முறையில் செயல்படும் ஒப்பற்ற வல்லமையுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : எங்கள் எண்ணத்தையும் உள்ளத்தையும் ஆய்ந்தறியும் ஞானமுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : எங்களுக்கு உதவிட என்றும் விரைந்து வரும் நல்ல மனமுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : வாழ்க்கையின் முடிவுக்கும், எங்கள் இறுதி நிலைக்கும் உமது பராமரிப்பால் எங்களை நடத்திச் செல்லும் அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : உமது உண்மையின் ஒளியால் எங்கள் இதயத்தின் இருளை நீக்கும் அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : எங்கள் வறுமையை ஒழிக்கும் கொடை வள்ளலாகிய அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : துன்புறுவோரைத் தேற்றும் நட்புறவுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : உமது இரக்கத்தால் எங்கள் பாவங்களை மன்னிக்கும் அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : எங்களைத் திடப்படுத்தும் வல்லமையுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : தீமைகளை எல்லாம் அகற்றும் ஆற்றலுடைய அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : உமது நீதியால் பாவத்திலிருந்து எங்களைத் தடுத்து ஆட்கொள்ளும் அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : நரகத்தை வெல்லும் திறமையுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : எங்கள் இதயங்களைக் கவரும் எழில் வதனமுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : உம் கையில் உலகத்தை ஏந்தும் பேராற்றலுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...
முத : ஆர்வமற்ற எங்கள் உள்ளங்களை உமது அன்புத் தீயால் பற்றி எரியச் செய்யும் அற்புதக் குழந்தை இயேசுவே...
முத : எல்லா நன்மைகளாலும் எங்களை நிரப்பும் அற்புதக் குழந்தை இயேசுவே...
முத : ஆசீரை அளிக்கின்ற அற்புதக் கரம் கொண்ட அற்புதக் குழந்தை இயேசுவே...
முத : உம்மை நாடி வருவோரின் உள்ளங்களை மகிழச் செய்யும் அற்புதக் குழந்தை இயேசுவே...
முத : உலகை எல்லாம் நிரப்பும் மாட்சிமையுள்ள அற்புதக் குழந்தை இயேசுவே...

முத : மிகுந்த இரக்கத்தோடு...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்களை மன்னித்தருளும்.
முத : மிகுந்த இரக்கத்தோடு...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்கள் மன்றாட்டைக் கனிவாய் கேட்டருளும்.

முத : எல்லாத் தீமையிலிருந்து...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்களை மீட்டருளும்.
முத : எல்லாப் பாவத்திலிருந்தும், அளவற்ற உம் நன்மைக்கு எதிராக எழும் எல்லா அவ நம்பிக்கையிலும் இருந்தும்...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்களை மீட்டருளும்.
முத : அற்புதம் புரியும் உமது ஆற்றலுக்கு எதிராக எழும் எல்லா சந்தேகத்திலுமிருந்தும்...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்களை மீட்டருளும்.
முத : உமது வழிபாட்டில் ஏற்படும் எல்லாக் குறைபாட்டிலுமிருந்தும்...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்களை மீட்டருளும்.
முத : எல்லாத் தீமையிலும், கேட்டிலுமிருந்தும்...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்களை மீட்டருளும்.

முத : உமது கன்னித் தாய் தூய மரியாள், வளர்ப்பு தந்தை தூய யோசேப்பு, இவர்களின் பரிந்துரை வழியாக எங்களை நீர் மன்னிக்க வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : உமது திருக்குழந்தைப் பருவத்தின் மேல் எங்களுக்குள்ள அன்பையும், பக்தியையும் காத்து வளர்த்திட வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : உமது அற்புதத் திருக்கரம் எங்களை விட்டு விலகாதிருக்க வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : உமது எண்ணற்ற நன்மைகளை நாங்கள் என்றும் மறவாதிருக்க வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : உமது திரு இருதய அன்பால் எங்கள் உள்ளங்களை மேன்மேலும் பற்றி எரியச்செய்ய வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : உம்மை நம்பிக்கையோடு கூவியழைப்போரின் குரலுக்குக் கனிவாய்ச் செவிமடுக்க வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.

முத : எங்கள் நாடு என்றும் அமைதியில் நிலைத்திருக்க அருள்தர வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : எல்லாத் தீமையிலிருந்தும் எங்களை விடுவித்தருள வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : உமது பக்தியிலே நிலைத்திருக்கும் அனைவருக்கும் நிலைவாழ்வை அளித்தருள வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : இறுதித் தீர்வை நாளிலே எங்களை இரக்கத்துடன் தீர்ப்பிட வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.
முத : உமது அற்புதத் திரு உருவத்தின் வழியாக நீர் எங்களுக்கு ஆறுதலாகவும், அடைக்கலமாகவும் இருக்க வேண்டுமென்று...
எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, உம்மை மன்றாடுகிறோம்.

முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல் : எங்கள் பாவங்களைப் மன்னித்தருளும்.
முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல் : எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
முத : உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியான இயேசுவே...
எல் : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

முத : மன்றாடுவோமாக! அற்புதக் குழந்தை இயேசுவே, அமைதியற்ற எங்கள் உள்ளங்களின் மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளுமாறு தாழ்ந்து, பணிந்து, வணங்கி உம்மை மன்றாடுகிறோம். இரக்கமே உருவான உம் இனிய இதயம், எங்கள் செபத்தைக் கனிவோடு ஏற்று, உருக்கமாக நாங்கள் மன்றாடும் இந்த வரங்களை அளித்தருளுமாறு பணிவோடு உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம். எங்களை வாட்டி வதைக்கும் துன்பத் துயரங்களையும், வேதனை சோதனைகளையும் நீக்கி, உமது ஆறுதலையும் ஆதரவையும் பெற்று, தந்தையோடும், தூய ஆவியாரோடும் என்றென்றும் நாங்கள் உம்மை வாழ்த்திப் போற்ற வரம் அருளும்.
எல் : ஆமென்.

## ஆற்றலுள்ள குழந்தை இயேசுவுக்கு நவமணி செபம்:

*(ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி, மணிக்கு ஒருமுறையாக, ஒன்பது முறை தொடர்ச்சியாக, ஒரே நாளில், குழந்தைக்குரியப் பற்றுதலோடு மன்றாட வேண்டும்)*

ஓ இயேசுவே! 'கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்' என்று மொழிந்தீரே. உமது தாயாகிய தூய கன்னி மரியாவின் பரிந்துரை வழியாக நான் கேட்கிறேன், தேடுகிறேன், தட்டுகிறேன். நான் கேட்கும் இந்த வரங்களைக் கொடுத்தருளுமாறு பணிவுடன் மன்றாடுகிறேன்.

*(உங்கள் விண்ணப்பங்களை சிறிது நேரம் மௌனமாக நினைவு கூறவும்)*

ஓ இயேசுவே! 'என் பெயரால் நீங்கள் தந்தையைக் கேட்பதெல்லாம் அவர் உங்களுக்கு அருளுவார்' என்று மொழிந்தீரே. உமது தாயாகிய தூய கன்னி மரியாவின் பரிந்துரை வழியாக எனக்கு அவசரமான இந்த மன்றாட்டை அளித்தருளமாறு, உமது பெயரால் தாழ்ந்த உள்ளத்துடன் தந்தையை கெஞ்சி மன்றாடுகிறேன்.

ஓ இயேசுவே! 'விண்ணும் மண்ணும் அழிந்து போகும். ஆனால் என் சொற்களோ ஒரு போதும் அழியா' என்று மொழிந்தீரே. உமது தாயாகிய தூய கன்னி மரியாவின் பரிந்துரை வழியாக என் செபம் கேட்கப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆமென்.

## விண்ணப்பச் செபம்:

அற்புதக் குழந்தை இயேசுவே! அமைதியற்ற எங்கள் உள்ளங்களில் மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளுமாறு தாழ்ந்து பணிந்து, வணங்கி வேண்டுகிறோம். இரக்கமே உருவான உம் இனிய இதயம், எங்கள் செபத்தைக் கனிவோடு ஏற்று, உருக்கமாக நாங்கள் மன்றாடிய இந்த வரங்களை அளித்தருளும்படி உம்மைப் பணிவோடு கெஞ்சி மன்றாடுகிறோம். எங்களை வாட்டி வதைக்கும் துன்ப துயரங்களையும், வேதனை சோதனைகளையும் நீக்கி, உமது ஆறுதலையும் ஆதரவையும் பெற்று தந்தையோடும் தூய ஆவியாரோடும் உம்மை என்றென்றும் நாங்கள் வாழ்த்திப் போற்ற அருள் புரியும். ஆமென்.

## விண்ணப்பங்கள்:

முத : பரிவிரக்கமுள்ள தந்தையே! உமது அன்புத் திரு மகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து எங்கள் தேவைகளை எல்லாம் அவருடைய பெயராலே உம்மிடம் நம்பிக்கையோடு கேட்குமாறு எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அதே நம்பிக்கையோடு இங்கு கூடியிருக்கும் உம் மக்களின் மன்றாட்டுக்களைக் கேட்டருள உம்மைப் பணிவுடன் வேண்டுகிறோம்.

முத : அன்புத் தந்தையே இறைவா! எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், அருள் பணியாளர்கள், துறவறத்தார் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். திருஅவையின் வளமைக்கு உதவும் வற்றாத ஊற்றாக இவர்களின் வாழ்க்கை அமைய வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்...

எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : அன்புத் தந்தையே இறைவா! தாங்கள் வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொண்ட அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். நன்றி கூறி உம்மை வாழ்த்திப் போற்றும் நல்ல உள்ளத்தை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்...

எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : அன்புத் தந்தையே இறைவா! நோயுற்றோர், திக்கற்றோர், சோர்ந்திருப்போர், தனிமையில் தவிப்போர் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். இவர்கள் அனைவருக்கும் ஆறுதலின், ஆதரவின் பிறப்பிடமாகத் அற்புதத் திருக்குழந்தையாகிய நீரே இருக்க வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்...

எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : அன்புத் தந்தையே இறைவா! தனிப்பட்ட வரங்கள் தேவைப்படும் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். இவர்களின் எளிய விசுவாசத்தை ஆசீர்வதித்து, உம் திருவுளப்படி இவர்களின் விண்ணப்பங்களுக்குச் செவிசாய்த்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்...

எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முத : அன்புத் தந்தையே இறைவா! அற்புதக் குழந்தை இயேசுவை நாடித் தேடி வரும் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். குழந்தை இயேசு உயிருள்ள விசுவாசத்தை இவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்...

எல் : அற்புதக் குழந்தை இயேசுவே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

*(உங்கள் விண்ணப்பங்களை சிறிது நேரம் மௌனமாக நினைவு கூறவும்)*

முத : தந்தையே! உம் திரு மகன் அற்புதக் குழந்தை இயேசு வழியாக எங்கள் மன்றாட்டுக்களை கேட்டருளியதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்வில் என்றுமே உமது திருவுளத்தை ஏற்று வாழும் வரத்தை எங்களுக்குத் தந்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## நன்றியறிதல்:

விண்ணகத் தந்தையே! எங்கள் மீட்பராம் அற்புதக் குழந்தை இயேசுவின் பிறப்பில் நாங்கள் மகிழ்ச்சி கொள்கிறோம். மனுக்குலத்திற்கு நீர் அருளிய மாபெரும் கொடை அவரே. அவரின் வாழ்வும், இறப்பும், உயிர்ப்பும் இவ்வுலகில் எங்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் பாதுகாப்பளித்து, மறுவுலகில் முடிவில்லாப் பேரின்பத்தை அளிப்பதாக. எங்கள் ஆண்டவராகிய அற்புதக் குழந்தை இயேசு வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## வல்லமையுள்ள குழந்தை இயேசு செபம்:

அற்புதக் குழந்தை இயேசுவே! உம்மை அன்புடன் ஆராதித்து, எனது துயரங்களை உம்முடன் பகிர்ந்து கொள்ள தாழ்மையான உள்ளத்தோடு உம்மிடம் வந்திருக்கிறேன். எனக்குத் தேவையான உதவிகளை அன்புடன் தருவீர் என்னும் பெரும் நம்பிக்கையுடன் வந்திருக்கிறேன். ஏனெனில், உம்மால் இயலாதது ஒன்றுமில்லை. பாவத்திலிருந்தும், சாத்தானின் அடிமைத் தனத்திலிருந்தும் எங்களை மீட்கும்படி நீர் மனித உரு எடுத்து, எங்கள் மேல் உள்ள அன்பால், உம்மையே நீர் தாழ்த்திக் கொண்டீர். உமது நன்மைத்தனத்தில் நாங்கள் நம்பிக்கை வைத்து, 'அப்பா, தந்தையே! இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும், என் விருப்பப்படி அல்ல; உம் விருப்பப்படியே நிகழட்டும்' என்று நீர் உமது இறப்பின் வேளையிலே உம் தந்தையை நோக்கி மன்றாடியதையே நானும் வேண்டுகிறேன். சிறு பிள்ளைகளுக்கு உமது அரசைத் தருவதாக வாக்களித்தீரே. சிறுமை நிறைந்த என்னையும் கண்ணோக்கிப் பாரும். என் துயரத்தை மகிழ்ச்சியாக மாற்றியருளும். இதனால் நான் உமது நட்புறவில் என்றென்றும் நண்பனாக வளர்வேன். இதே நட்புறவை விண்ணகத்திலும் அனுபவிக்க அருள் தாரும். ஆமென்.

### அர்ப்பண மன்றாட்டு:

இனிய அற்புதக் குழந்தை இயேசுவே! உமது குழந்தைப் பருவத்தின் மேன்மையை வியந்து, உம்மை நான் ஆராதிக்கிறேன், அன்பு செய்கிறேன், மாட்சிப் படுத்துகிறேன். நீர் என் மீது கொண்ட அன்பால் எனக்காக ஒரு சிறு குழந்தையாகப் பிறந்தீர். எனவே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். அந்த அன்புக்குப் பதிலன்பாக என்னை முழுவதும் உமக்குக் கையளித்துக் காணிக்கையாக்குகிறேன். இன்றும், என்றும், என் வாழ்நாள் முழுவதும் உம் குழந்தைப் பருவத்தின் புண்ணியங்களை எனக்கு அளிக்குமாறு உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன். அன்புள்ள இயேசுவே! உமது தாழ்ச்சியையும், கீழ்ப்படிதலையும், எளிமையையும் எனக்குத் தந்தருளும். உம்மை அன்பு செய்யவும், உம்மைப் பின்பற்றி வாழவும், விண்ணகத்தில் உமது தெய்வீகத்தைக் கண்டுகளிக்கவும் உமது அருள் எனக்கு என்றும் துணை நிற்பதாக. ஆமென்.

### நோயாளிகளுக்காக செபம்:

எங்கள் தந்தையாகிய இறைவா! பாவத்திலிருந்து எங்களை மீட்கவும், துன்பத்திலிருந்து எங்களை விடுவிக்கவும், உம் திருவுளப்படி ஒரு சிறு குழந்தையாக உம் திருமகன் எங்களிடையே தோன்றினார். நோயுற்று இருக்கும் அனைவருக்காகவும் நாங்கள் உம்மை மன்றாடுகிறோம். உமது திருவுளப்படி இவர்களின் வேதனையை நீக்கி நோயை குணமாக்கியருளும். உமது இரக்கத்தால், உள்ளத்திலும் உடலிலும் இவர்கள் நலம் பெற்று, மீண்டும் உமக்கு நன்றி செலுத்துவார்களாக. தந்தையாகிய உம்மோடும், தூய ஆவியோடும் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவரும் உம் திருமகனாகிய குழந்தை இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

இரக்கமுள்ள தந்தையே! உம் திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசுக் கிறிஸ்து, தம்மை நாடி வந்த எல்லா நோயாளிகளின் துயரைக் கண்டு மனம் இரங்கினார். உடல் குறையுற்றவர்களும், தீராத நோயால் துன்புறுவோரும், கனிவான அவரது கரம் தொட்டவுடனே குணம் அடைந்தனர். இங்கே கூடியிருக்கும் நோயாளிகள் அனைவரையும் அதே அன்புக் கரத்தால் தொட்டு குணமாக்க வேண்டுமென்று பணிவோடு உம்மை மன்றாடுகிறோம். இவர்கள் அனைவரும் உடலிலும் உள்ளத்திலும் முழு நலம் பெற்று உம்மைப் போற்றி மகிழ்வார்களாக. எங்கள் ஆண்டவராகிய அற்புதக் குழந்தை இயேசு வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

### இறை ஆசீர் பெறுதல்:

நாம் அனைவரும் சிரம் தாழ்த்தி இறைவனின் ஆசியை இறைஞ்சுவோம். இறைவனின் திரு மகனாகிய அற்புதக் குழந்தை இயேசு, நம் பாவ இருளை அகற்றி, மகிழ்ச்சியின் ஒளியால் நம் உள்ளத்தை நிரப்ப இவ்வுலகத்திற்கு வந்தார். மனுவுருவான வார்த்தையானவர் நமக்கு அமைதியையும், ஆசியையும், அக்களிப்பையும் அளித்து, நம் அனைவரையும் நட்புறவில் ஒன்றாய் இணைப்பாராக. இறைவனின் ஆவி நம்மை ஒரே குடும்பமாய் இவ்வுலகில் இணைத்து, நிலைவாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்வாராக. ஆமென்.

### நன்றி மன்றாட்டு:

இரக்கம் மிகுந்த அற்புதக் குழந்தை இயேசுவே! நீர் என் மேல் பொழிந்தருளிய எல்லா நன்மைகளுக்காகவும் முழந்தாளிட்டு உமக்கு மனம் நிறைந்த என் நன்றியைச் செலுத்துகிறேன். உமது இரக்கத்தை நான் என்றும் போற்றிப் புகழ்வேன். நீர் ஒருவரே என் இறைவன், என்

துணைவன் என்று நான் பறைசாற்றுவேன். என் நம்பிக்கை எல்லாம் நான் உம்மிலே வைக்கிறேன். உமது இரக்கத்தையும், உமது வள்ளல் தன்மையையும் நான் எங்கும் பறை சாற்றுவேன். உமது பேரன்பையும், அரும்பெரும் செயல்களையும் எல்லோரும் ஏற்றிப் போற்றுவார்களாக. அற்புதக் குழந்தை இயேசுவின் பக்தி மக்கள் உள்ளங்களில் அதிகமதிகமாகப் பரவுவதாக. உமது உதவியை பெற்று மகிழும் எல்லோரும் உமது குழந்தைப் பருவத்திற்கு என்றும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்களாக. என்றென்றும் எல்லோரும் உம்மைப் போற்றி மாட்சிப் படுத்துவார்களாக. ஆமென்.

## துன்ப வேளையில் மன்றாட்டு:

அற்புதக் குழந்தை இயேசுவே! எங்களோடு வாழ்வதும், எங்கள் மேல் உமது ஆசியை ஏராளமாகப் பொழிவதும் உமக்கு மாபெரும் மகிழ்ச்சியே. நம்பிக்கையோடு உம்மை நாடி வரும் பலர் வியப்புக்குரிய வரங்களை உம்மிடமிருந்து பெற்றுள்ளனர். அவர்கள் கேட்ட மன்றாட்டுக்களையும் நிறைவாய் அடைந்துள்ளனர். உமது அற்புத திரு உருவத்திற்கு முன் முழந்தாளிட்டு, என் இதயத்தைத் திறந்து, என் விண்ணப்பங்களையும், மன்றாட்டுக்களையும், ஏக்கங்களையும் உம்மிடம் சமர்ப்பிக்கிறேன்.

*(உங்கள் விண்ணப்பங்களை உறுதியோடும் நம்பிக்கையோடும் மௌனமாக நினைவு கூறவும்)*

அற்புதக் குழந்தை இயேசுவே! உமது திரு உளப்படி எனக்கு ஆகட்டும். உமது ஞானத்திற்கும், அன்பிற்கும் ஏற்ப, என் நன்மைக்காகவே எல்லாவற்றையும் நீர் செய்வீர் என்று நான் அறிவேன். இத்துன்ப வேளையிலே எனக்கு ஆறுதலாக இருந்து, மகிழ்ச்சியை அளிக்க இரக்கம் கொள்ள வேண்டும் என்று உம்மை நோக்கிப் பணிவோடு மன்றாடுகிறேன். ஆமென்.